**Starting time 12.15 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 217/2020**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 27.03.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமராஜ் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : நான் இந்த வழக்கை யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால், சின்னமுத்து, அன்னக்கிளி பாண்டியன். இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், என்னுடைய நிலத்தில் விவசாயம் செய்ய தடுப்பதற்கு கேட்டுள்ளேன். எனக்கு எழுத படிக்கத் தெரியுமா என்றால், தெரியும். என்னுடைய பிரமாண வாக்குமூல சங்கதிகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால், தெரியும்.

2. எந்தெந்த புல எண்களுக்கு நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், புல எண். 183/5 சி அதில்தான் பாதை பிரச்சினை ஏற்பட்டது. அந்த புல எண் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். ஆறுமுகபிள்ளை நிலத்திற்கு தெற்கு, தென்வடல் வண்டிப்பாதைக்கும் கிழக்கு, ஜெயகோபால் நிலத்திற்கும் தெற்கு, தொப்பளாச்சி கரட்டிற்கும் மேற்கு, இதற்குள்ளாக 2 ஏக்கர் 15 செண்ட் நிலம் பூராவும்.

3. வழக்கு சொத்தை கிரயம்பெறுவதற்கு முன்பாக நான் ஒப்பந்தம் போட்டேன் என்றால், ஆமாம். ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் செக்குபந்தி விவரம் தெரியுமா என்றால், அதற்கும் மேற்சொன்ன விவரம்தான். அந்த விஸ்தீரணம் என்ன என்றால், 4 செண்ட். அதே அளவு நிலத்தைதான் கிரயப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளோம் என்றால், ஆமாம். ஒப்பந்ததில் சொல்லப்பட்டுள்ள விஸ்தீரணமும், கிரயப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள விஸ்தீரணம் வெவ்வேறானவை என்றால், சரியல்ல.

4. தாவா சொத்தில் செல்லும் பாதை கிரயம்பெற்ற முன்பிருந்தே செல்கிறதா அல்லது கிரயம் பெற்ற பின் செல்கிறாதா என்றால், அவ்வாறு எதுவும் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு காவல் நிலையத்தி புகார் அளிக்கப்பட்டது என்றால், ஆமாம். தாவா சொத்தில் பிரச்சினையானது சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் அளித்துள்ளேனா என்றால், ஆமாம்.

5. நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், தடையுறுத்துக்கட்டளை பெறவேண்டிதான் புகார் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. நான்தான் பிரதிவாதிகளை அந்த தடத்தை பயன்படுத்தக்கூடாது என தடுக்க வேண்டி பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. என்னுடைய இடத்தில் தடம் வேண்டும் என்று பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து பிரச்சினை செய்ததால்தான் நான் அவர்கள் மீது புகார் அளித்துள்ளேன்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 12.30 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.